# AIA SMART WEALTH

## உங்கள் சொத்துக்களை உருவாக்கி, முகாமைப்படுத்தி, பாதுகாக்கும் திட்டம்



AIA இன்ஷூவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

## உங்களுடைய கனவு...

- சொத்து சேர்ப்பதா?
- நீங்கள் சேர்த்த சொத்தை நிர்வகித்துப், பாதுகாப்பதா?
- உங்கள் அன்பிற்குரியவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக உங்கள் சொத்தைப் பயன்படுத்துவதா?

அமைதியான மற்றும் மகிழ்ச்சியான பணிஓய்விற்காக





எதிர்கால அபிலாஷைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை அடைவதற்கு

**சொத்தின் இன்றையத் தேவையைப் போன்றே எதிர்காலத்திலும் இதன் தேவை மிகவும் முக்கியமானதாகும்...**



நிதியியல் பாதுகாப்பாக




பரம்பரைச் சொத்தை உருவாக்குவதற்காக



உங்கள் பிள்ளையின் கல்விக் கனவை நிறைவேற்றுவதற்காக

சொத்து சேர்ப்பதென்பது முக்கியமானதொரு விடயமாகும். எனினும் உங்கள் சொத்தை நிர்வகித்துப், பாதுகாப்பதற்காக சரியான தெரிவுகளை அல்லது சரியான கலவையைத் தேர்ந்தெடுப்பதென்பது அதை விட மிகவும் முக்கியமானதாகும்.





இந்த தெரிவுகள் அனைத்தும் வேறுபட்ட 'இலாபங்கள்' மற்றும் 'பாதுகாப்பை' வழங்குகின்றன. ஆகவே அவைகள் வழங்கும் இலாபம் மற்றும் பாதுகாப்பின் அடிப்படையில் இந்த ஒவ்வொரு தெரிவினையும் நீங்கள் ஆராய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

நீங்கள் உங்கள் அன்பிற்குரியவர்களுடன் இல்லாமல் இருக்கும் போதும் கூட விசேடமாக அவர்களின் நிதியியல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இது உதவுகின்றது.






மிகவும் புத்திசாதுர்யமாக எவ்வாறு நீங்கள் முதலிட முடியும் என்பதைப் பற்றிய முழுமையான கண்ணோட்டம் ஒன்றை உங்களுக்கு வழங்குவதற்காக ஒப்பீட்டு அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

## காணப்படும் தெரிவுகள் ஒப்பீடு







| சொத்து சேர்த்தல், முகாமை செய்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான தெரிவுகள் | இலாபம் | பாதுகாப்பு | ஆயுள் பாதுகாப்பு |
|---|---|---|---|
| நிலையான வைப்புகள் |  |  | ✗ |
| சேமிப்பு |  |  | ✗ |
| ரியல் எஸ்டேட் |  |  | ✗ |
| பங்குச் சந்தை |  |  | ✗ |
| வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தல் |  |  | ✗ |
| தங்கத்தில் முதலீடு |  |  | ✗ |
| தனிப்பட்ட முதலீட்டாளராக இருத்தல் |  |  | ✗ |
| ஆயுள் காப்புறுதி |  |  | ✓ |


குறிப்பு: அறியப்பட்ட அபாயங்கள், அறியப்பட்ட சந்தைப் பெறுமதி, பொது மக்கள் கருத்து, வட்டி/பங்குலாப வீதங்கள் போன்ற தற்போதைய சந்தைப் புள்ளிவிபரங்களுடன் ஏற்கனவே திரட்டப்பட்ட தகவல் ஆய்வின் அடிப்படையிலேயே இந்த ஒப்பீடு அமைந்துள்ளது.

நீங்கள் உங்கள் அன்பிற்குரியவர்களுடன் இல்லாமலிருக்கும் போதும் கூட உங்கள் சொத்து வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் போது அதிலிருந்து மிகவும் ஆரோக்கியமான ஒரு இலாப மீதி, பாதுகாப்பினை உறுதிப்படுத்தம் தெரிவு ஒன்று காணப்படுகின்றது. ஆயுள் காப்புறுதியின் அபாயம் மற்றும் இலாபங்களைக் கருதாமல் உள்ளமைக்கப்பட்ட ஆயுள் அனுகூலத்தினைக் கொண்டிருக்கின்ற ஒரே ஒரு தெரிவு ஆயுள் காப்புறுதியாகும். நீங்கள் அவர்களுடன் இல்லாமலிருக்கும் போதும் கூட உங்கள் சொத்து பாதுகாப்பாகவும் மற்றும் உங்களின் அன்பிற்குரியவர்கள் நிதியியல் ரீதியாக பாதுகாப்பாகவும் இருப்பதனை இது உறுதிசெய்கின்றது.

# ஏனைய முதலீட்டுத் தெரிவுகளிலும் பார்க்க ஏன் நீங்கள் AIA இன்ஷுரன்ஸினைத் தெரிவு செய்ய வேண்டும்?

## இலாபம்

AIA தமது காப்புறுதிதாரர்களுக்கு கவர்ச்சிகரமான பங்குலாபங்களைத் தொடர்ந்து பெற்றுக்கொடுத்து வந்துள்ளது. அவர்கள் பொருந்திக் கொண்ட இலாபத்தை விட அதிகமாகவே பல வருட காலமாகச் செலுத்தி வந்துள்ளனர். AIA யின் முதலீட்டு உபாய முறையில் காணப்படும் தரம் மற்றும் நிலையான தன்மை என்பன இதன் மூலம் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது.




## பாதுகாப்பு

உங்களால் செலுத்தப்படும் கட்டுப்பணங்கள் ஆயுள் நிதி என அழைக்கப்படும் மிகவும் பாதுகாப்பான நிதியில் முதலீடு செய்யப்படும். இந்த நிதியானது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிர்வாக விதிகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது.

AIA இல் எங்களுடைய பெரும்பாலான முதலீடுகளை நாங்கள் அரச பத்திரங்கள் மற்றும் உயர் தரக் கடன் பத்திரங்கள் ஆகியவற்றில் நிர்வகிக்கின்றோம்.

AIA இனது மிகவும் விவேகமான முதலீட்டு மூலோபாயமானது மிகவும் நீண்ட கால இலாபங்களை மேம்படுத்தும் அதேவேளை எங்களுடைய காப்புறுதிதாரர்களின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிறந்த இலாபங்களுடன் பாதுகாப்பான நிதியினை நீங்கள் பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் உங்கள் நிதி மிகவும் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும்.

## ஆயுள் பாதுகாப்பு

ஆயுள் காப்பீட்டைக் கொண்டுள்ள முதலீட்டுச் சந்தையிலுள்ள ஒரேயொரு தெரிவு.

2019 மற்றும் 2020 இல் இலங்கையின் மிகச்சிறந்த காப்புறுதி வழங்குநராக தொடர்ச்சியாக 2 வருடங்கள் AIA இன்ஷுரன்ஸ் லங்கா லிமிடட் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.*

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 100 வருட வரலாறு.

உலகம் முழுவதும் 34 மில்லியன் தனிநபர் காப்புறுதிகள்.

குறிப்பு: தற்போது விற்பனை செய்யப்படுகின்ற ஆயுள் காப்புறுதித் திட்டங்களின் காப்புறுதி நிபந்தனைளுக்கு ஏற்ப AIA ஸ்ரீலங்காவினுடைய முதலீட்டு இலாபத்தின் 75% இன் அடிப்படையில் மொத்தப் பங்குலாப வீதத்தை மேலே குறிப்பிடுகின்றது. கடந்த கால செயற்திறன் எதிர்கால செயற்திறன் குறிகாட்டியாக இருக்காது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள்.

*இந்த அட்டவணையில் காண்பிக்கப்படும் தகவல்கள் 2021 ஏப்ரல் மாதத்திற்கு உகந்ததாகும்.



# AIA Smart Wealth

## நீங்கள் சொத்து சேர்ப்பதற்கும் மற்றும் அதனைப் பாதுகாப்பதற்கும் மிகவும் பாதுகாப்பான முதலீட்டு அனுகூலங்களை வழங்குகின்ற

**ஆயுள் காப்புறுதித் திட்டமான AIA ஸ்மார்ட் வெல்த்தினை நாங்கள் உங்களுக்கு வழங்குகின்றோம். இந்த நெகிழ்தன்மையான காப்புறுதித் திட்டமானது நீங்கள் சொத்து சேர்த்தல், அதனை நிர்வகித்தல் மற்றும் மேலாண்மை செய்வதில் உங்களுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.**

**இது 4 வருடங்கள், 6 வருடங்கள் மற்றும் ஒற்றைக் கட்டுப்பணம் என்றவாறு மூன்று (03) கட்டுப்பணச் செலுத்தல் கால விருப்பத் தெரிவுகளைஉங்களுக்கு வழங்குகின்றது**

### AIA Smart Wealth திட்டத்தின் பிரதான அனுகூலங்கள் ஒரே கண்ணோட்டத்தில்



ஆயுள் அனுகூலம்




வருடாந்த உத்தரவாதப்படுத்தப்பட்ட பங்குலாபங்கள்



குறிப்பிடத்தக்க விசுவாச வெகுமதியுடன் (Loyalty Reward) முதிர்வில் பாரியதொரு தொகை



முதிர்வு மீளப்பெறல் நெகிழ்வுத் தன்மை



அவசர பண மீளப்பெறல் தெரிவு




வளர்ச்சியடையும் மாதாந்த வருமானம்



கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்



குறுகிய கட்டுப்பணம் செலுத்தும் காலம் அல்லது ஒற்றைக் கட்டுப்பணத்திற்கான நீண்ட கால பாதுகாப்பு



பங்குலாப அதிகரிப்பான்



விபத்து மூலமான மரண அனுகூலம்



முழுமையான நிரந்தரமான இயலாமை அனுகூலம்

ஒற்றைக் கட்டுப்பணத் தெரிவுக்கு, கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம், விபத்து அனுகூலம், மொத்த நிரந்தர ஊனமுற்றோர் அனுகூலம் மற்றும் அவசரகால பணம் பெறும் தெரிவு என்பன பொருத்தமற்றது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.




### உங்களுக்குத் தெரியுமா?

AIA ஸ்மார்ட் வெல்த் வெறுமனே உங்கள் சொத்தை சேர்ப்பதற்கு மட்டும் உதவாமல் அதனை நிர்வகிப்பதற்கு, பாதுகாப்பதற்கும் உதவுகின்றது.

# ஏன் AIA ஸ்மார்ட் வெல்த் உங்களுக்கான மிகச்சிறந்த தீர்வொன்றாக உள்ளது

AIA ஸ்மார்ட் வெல்த் 3 வழிகளில் உங்கள் சொத்தைச் சேர்ப்பதற்கும், வளர்ச்சியடையச் செய்வதற்கும் உதவுகின்றது.

## சொத்து சேர்த்தல்



## சொத்து மேலாண்மை



## சொத்துப் பாதுகாப்பு





## சொத்து சேர்த்தல்

- கட்டுப்பணத்தை, 4 அல்லது 6 வருடங்களுக்கு அல்லது ஒரே தடவையில் மொத்தமாகச் செலுத்தவும்.
- 20 ஆண்டுகளுக்காக ஒரு நிதியத்தைக் கட்டியெழுப்பவும்.
- உங்கள் நிதியினை முதிர்வில் மொத்தத் தொகை ஒன்றாகப் பெறுங்கள் அல்லது 30 வருடங்கள் வரை வருமானம் ஒன்றைப் பெறுங்கள் (அல்லது மொத்தத் தொகை ஒன்றாக அதன் ஒரு பகுதியினை பெறுவதற்கும், மீதித் தொகையினை மாதாந்த வருமானமாகப் பெறுவதற்கும் கூடத் தெரிவு செய்யலாம்).
- 15வது மற்றும் 20வது காப்புறுதி வருடத்தில் கவர்ச்சிகரமான விசுவாச வெகுமதி (10 ஆவது மற்றும் 15 ஆவது காப்புறுதிக் கால முதிர்வில் செலுத்தப்படும்).
- 15வது மற்றும் 20வது காப்புறுதி வருடத்தில் கவர்ச்சிகரமான விசுவாச வெகுமதி (5, 10 மற்றும் 15 ஆவது காப்புறுதிக் கால முதிர்வில் செலுத்தப்படும்).
- காப்புறுதிக் கால நிறைவில் பெரியதொரு தொகை.



## சொத்து மேலாண்மை

- உங்கள் நிதியானது சிறந்த இலாபங்களுடன் பாதுகாப்பான நிதி ஒன்றினைப் பெறுவதை உறுதிசெய்வதற்காக மேலாண்மை செய்யப்படும்.
- அரச பத்திரங்கள், உயர் தரக் கடன் பத்திரங்கள் ஆகியவற்றில் உங்களின் பெருமளவான நிதி முதலீடு செய்யப்படும்.
- ஏனையப் ஆயுள் காப்புறுதி வழங்குநர்கள் மத்தியில் மிகவும் உயர்வான மூலதன போதுமான விகிதம் (CAR)



## சொத்துப் பாதுகாப்பு

- உங்கள் மரணத்தின் பின்னர், உங்கள் அன்பிற்குரி மொத்த வருடாந்தக் கட்டுப்பணத்தின் 50 மடங்கிற்கு சமமான ஆயுள் அனுகூலம்.
- விபத்து காரணமாக துரதிஷ்டவசமாக மரணம் நிகழ்ந்தால் விபத்து மூலமான மரண அனுகூலம்*.
- விபத்து காரணமான முழுமையான நிரந்தரமான இயலாமை மற்றும் நிரந்தரமான பகுதியளவான இயலாமைக்கான காப்பீடு*.
- கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் - நீங்கள் மரணித்தால் அல்லது நிரந்தரமான முழுமையான இயலாமைக்குட்பட்டால் AIA உங்கள் சார்பாக கட்டுப்பணத்தைச் செலுத்தும் மற்றும் நீங்கள் தீர்மானித்துள்ளவாறு உங்கள் அன்பிற்குரியவர்கள் முதிர்வினைப் பெறுவார்கள்*.

*ஒற்றைக் கட்டுப்பணத் தெரிவுக்கு, கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம், விபத்து அனுகூலம், மொத்த நிரந்தர ஊனமுற்றோர் அனுகூலம் மற்றும் அவசரகால பணம் பெறும் தெரிவு என்பன பொருத்தமற்றது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

# உள்ளமைக்கப்பட்ட கட்டுப்பண அனுகூலங்கள்



**துரதிஷ்டவசமான மரணம் நிகழ்ந்தால்**

உங்கள் அன்பிற்குரியவர்கள் ஆயுள் அனுகூலத் தொகையினை உடனடியாகப் பெறுவார்கள்.



விபத்து காரணமாக மரணம் நிகழ்ந்தால் ஆயுள் அனுகூலத் தொகைக்கு மேலதிகமாக விபத்து அனுகூலத் தொகை செலுத்தப்படும்*.




கட்டுப்பணச் செலுத்தல் காலத்தின் போது விபத்து நிகழ்ந்தால் AIA உங்கள் சார்பாக கட்டுப்பணங்களைச் செலுத்தி, உங்கள் காப்புறுதியைத் தொடரும்*.




ஆகவே உங்கள் அன்பிற்குரியவர்களுக்காக நீங்கள் கட்டியெழுப்பத் தீர்மானித்த நிதியிலிருந்து அவர்கள் நன்மையடைவார்கள். மொத்தத் தொகை ஒன்றாக அல்லது மாதாந்த வருமானமாக இழப்பீட்டுக் கோரிக்கைக்கான நிதியினைத் தெரிவு செய்வதில் அவர்கள் நெகிழ்வுத் தன்மையினைக் கொண்டிருப்பார்கள்.



**விபத்து காரணமான துரதிஷ்டவசமான நிரந்தரமான இயலாமை ஏற்பட்டால்**

முழுமையான நிரந்தரமான இயலாமை ஏற்பட்டால் நீங்கள் விபத்து அனுகூலத் தொகையினைப் பெறுவீர்கள்*.





பகுதியளவான நிரந்தரமான இயலாமை ஏற்பட்டால் காப்புறுதித் திட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு ஏற்புடைய அனுகூலத் தொகையினை நீங்கள் பெறுவீர்கள்*.




கட்டுப்பணச் செலுத்தல் காலத்தின் போது முழுமையான நிரந்தரமான இயலாமை ஏற்பட்டால் AIA உங்கள் சார்பாக கட்டுப்பணங்களைச் செலுத்தும். மேலும் காப்புறுதியைத் தொடரும். ஆகவே நீங்கள் கட்டியெழுப்புவதற்குத் தீர்மானித்திருந்த நிதியினை நீங்கள் அனுபவிக்க முடியும். மொத்தத் தொகை ஒன்றாக அல்லது மாதாந்த வருமானமாக இழப்பீட்டுக் கோரிக்கைக்கான நிதியினைத் தெரிவு செய்வதில் நீங்கள் நெகிழ்வுத் தன்மையினைக் கொண்டிருப்பீர்கள். முழுமையான நிரந்தரமான இயலாமையானது நோய் காரணமாக ஏற்பட்டால் கூட AIA இனால் வழங்கப்படும் காப்புறுதியின் தொடர்ச்சி ஏற்புடையதாக இருக்கும்.

*ஒற்றைக் கட்டுப்பணத் தெரிவுக்கு, கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம், விபத்து அனுகூலம், மொத்த நிரந்தர ஊனமுற்றோர் அனுகூலம் மற்றும் அவசரகால பணம் பெறும் தெரிவு என்பன பொருத்தமற்றது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.



## பாரிய முதிர்வு நிதியினை வழங்குவதற்காக விசுவாச வெகுமதிகள் (Loyalty Rewards) செலுத்தப்படும்.

உங்களுடைய நிதியியல் அர்ப்பணிப்பானது 5, 10 மற்றும் 15 வருட காப்புறுதிக் காலங்களுக்கான முதிர்வில் மற்றும் 20 வருட காப்புறுதிக் காலத்திற்காக 15 மற்றும் 20 ஆவது வருடத்தில் வருடாந்தமாக்கப்பட்ட அடிப்படைக் கட்டுப்பணத்தின் 450% வரை உங்களுக்கு விசுவாச வெகுமதிகளை (Loyalty Reward) வழங்கும்.

| கட்டுப்பணச் செலுத்தல் முறை | 20 வருடத் திட்டம் | | | | 15 வருடத் திட்டம் | 10 வருடத் திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| | 15 வருடம் | | 20 வருடம் | | 15 வருடம் | 10 வருடம் |
| | 6 வருடச் செலுத்தல் | 4 வருடச் செலுத்தல் | 6 வருடச் செலுத்தல் | 4 வருடச் செலுத்தல் | 6 வருடச் செலுத்தல் | 4 வருடச் செலுத்தல் |
| வருடாந்தம் | 50% | 50% | 400% | 250% | 225% | 150% |
| அரையாண்டாக | 50% | 50% | 400% | 250% | 225% | 150% |
| காலாண்டாக | 50% | 50% | 350% | 200% | 200% | 150% |
| மாதாந்தமாக | 50% | 50% | 300% | 200% | 175% | 150% |

5 வருட கொள்கைக் கால ஒற்றைக் கட்டுப்பணத்திற்கு, வெகுமதி அனுகூலம் அடிப்படை ஒற்றைக் கட்டுப்பணத்தின் 5% ஆகும்.
10 வருட கொள்கைக் கால ஒற்றைக் கட்டுப்பணத்திற்கு, வெகுமதி அனுகூலம் அடிப்படை ஒற்றைக் கட்டுப்பணத்தின் 10% ஆகும்.

## பங்குலாப அதிகரிப்பான் (பூஸ்டர்) இனால் அதிகரிக்கப்பட்ட மாதாந்த வருமானம் அல்லது முதிர்வில் மொத்தத் தொகை




மொத்தத் தொகை ஒன்றாக உங்கள் முழு முதிர்வு அனுகூலத்தை இழப்பீட்டுக் கோரிக்கையாகத் தெரிவு செய்வதற்கு உங்களால் தெரிவு செய்ய முடியும் அல்லது 5 தொடக்கம் 30 வருட காலத்திற்கு மாதாந்த வருமானமாக இழப்பீட்டுக் கோரிக்கையாகத் தெரிவு செய்வதற்கு உங்களால் தெரிவு செய்ய முடியும். முதிர்வில் மாதாந்த வருமானத் தெரிவினை நீங்கள் தேர்வு செய்தால் வருடாந்தப் பங்குலாப வீதத்தின் 30% அதிகமானதை செலுத்துவதன் மூலம் பங்குலாப அதிகரிப்பான் அம்சமானது உங்கள் மாதாந்த வருமானத்தை அதிகரிக்கும்.

## வருடாந்தம் உத்தரவாதப்படுத்தப்பட் பங்குலாபங்கள்




ஒவ்வொரு வருடமும் உங்கள் நிதியின் தொடர்ச்சியான வளர்ச்சியினை உறுதிப்படுத்துவதற்காக AIA ஸ்மார்ட் வெல்த் தனித்துவமான பங்குலாப முறைமையினை வழங்குகின்றது. இது எது உயர்வாக இருக்குமொ அதனடிப்படையில் பிரகடனப்படுத்தப்பட்ட பங்குலாப வீதத்தில் (நிகர கட்டணங்கள்) அல்லது வருடாந்த உத்தரவாதப்படுத்தப்பட்ட பங்குலாப வீதத்தில் இருக்கலாம்.

## நிதியியல் அவசர தேவை ஏற்பட்டால்




கட்டுப்பணச் செலுத்தல் காலத்தின் நிறைவின் பின்னர் எந்தவொரு நேரத்திலும் நிதிப் பெறுமதியின் 15% இனை உங்களால் மீளப்பெற முடியும். இது வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளக்கூடிய நிகழ்வுகளை கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட ஒரு நெகிழ்வுத்தன்மையாகும். மேலும் இது காப்புறுதிக் காலத்தின் போது ஒரு தடவை மட்டுமே கிடைக்கப்பெறும். (உங்கள் கட்டுப்பணத்தை 4 அல்லது 6 வருடங்களுக்கு நீங்கள் செலுத்த விரும்பினால் இந்தச் சிறப்பம்சம் கிடைக்கும்).

# எவ்வாறு AIA ஸ்மார்ட் வெல்த் செயற்படுகின்றது?

**உதாரணம் 1:** ரஜீவிற்கு (அடுத்த பிறந்த தினத்தில்) 35 வயதாகின்றது. இவருக்கு திருமணமாகி, தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் முழுமையான வாழ்க்கையை வாழ்கின்றார். கீழுள்ள அனுகூலங்களுடன் இவர் AIA ஸ்மார்ட் வெல்த் திட்டம் ஒன்றினை கொள்வனவு செய்திருக்கின்றார்.



| | |
|---|---|
| **6 வருட** கட்டுப்பணச் செலுத்தல் காலம் | ஆயுள் அனுகூலம் **ரூபா. 2.5 மில்லியன்** |
| **20 வருட** காப்புறுதிக் காலத்துடன் | விபத்து அனுகூலம் **ரூபா. 2.5 மில்லியன்** |
| வருடாந்தக் கட்டுப்பணம் **ரூபா. 250,000** | கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் - **ஆம்** |

# AIA ஸ்மார்ட் வெல்த் திட்டமானது ரஜீவ் தனது சொத்தை சேர்த்தல், நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு எவ்வாறு உதவியுள்ளது

**முதலீட்டு அனுகூலங்கள்**

முதிர்வில் ரஜீவிட்காக விளக்கப்பட்டுள்ள நிதி கீழுள்ளவாறு

| | உத்தேசிக்கப்பட்டுள்ள பங்குலாப வீதங்கள் | | |
|---|---|---|---|
| | வருடமொன்றுக்கு 4% | வருடமொன்றுக்கு 8% | வருடமொன்றுக்கு 10% |
| முதிர்வில் உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி (ரூபா) | 2,784,734 | 4,521,958 | 5,884,770 |

ரஜீவ் தனது முதிர்ச்சி அனுகூலத்தை, 15 வருடங்களுக்கு மாதாந்த வருமானமாகப் பெற எதிர்பார்த்தால், அவருக்கு பின்வருமாறு மாதாந்த வருமானம் கிடைக்கும்.

| உத்தேசிக்கப்பட்டுள்ள பங்குலாப வீதங்கள் | வருடமொன்றுக்கு 4% | வருடமொன்றுக்கு 8% | வருடமொன்றுக்கு 10% |
|---|---|---|---|
| பங்குலாப அதிகரிப்பானுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள வருடாந்தப் பங்குலாபங்கள் | வருடமொன்றுக்கு 5.2% | வருடமொன்றுக்கு 10.4% | வருடமொன்றுக்கு 13% |
| 56 வயதில் | 15,471 | 25,122 | 32,693 |
| 61 வயதில் | 19,233 | 39,820 | 58,262 |
| 66 வயதில் | 23,911 | 63,116 | 103,829 |
| வருமானம் பெறும் காலத்தின் போது மொத்த வருமானப் பெறுமதி | 3,844,140 | 9,316,512 | 14,923,213 |

## பாதுகாப்பு அனுகூலங்கள்

விபத்தொன்றின் காரணமாக 3வது வருடத்தின் போது ரஜீவ் மரணித்தால் அவருடைய அன்பிற்குரியவர்கள் கீழுள்ளவாறு பாதுகாப்பு அனுகூலங்களைப் பெறுவார்கள்.



ரஜீவினுடைய அன்பிற்குரியவர்களுக்கு ரூபா. 2,500,000 செலுத்தப்படும்



ஆயுள் அனுகூலத்திற்கு மேலதிகமாக மற்றுமொரு ரூபா. 2,500,000 ரஜீவினுடைய அன்பிற்குரியவர்களுக்குச் செலுத்தப்படும்.




ரஜீவ் சார்பாக AIA கட்டுப்பணங்களைச் செலுத்தி காப்புறுதியைத் தொடரும்.




ஆகவே ரஜீவினுடைய அன்பிற்குரியவர்களுக்காக அவர் கட்டியெழுப்ப நினைத்த நிதியிலிருந்தான அனுகூலங்களை அவர்கள் பெறுவார்கள். மேலும் மொத்தத் தொகை ஒன்றாக அல்லது மாதாந்த வருமானமாக இழப்பீட்டுக் கோரிக்கைக்கான நிதியினைத் தெரிவு செய்வதில் அவர்கள் நெகிழ்வுத் தன்மையினைக் கொண்டிருப்பார்கள்.



**உதாரணம் 2:** கயானிற்கு (அடுத்த பிறந்த தினத்தில்) 40 வயதாகின்றது. இவருக்கு திருமணமாகி, தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் முழுமையான வாழ்க்கையை வாழ்கின்றார். கீழுள்ள அனுகூலங்களுடன் இவர் AIA ஸ்மார்ட் வெல்த் திட்டம் ஒன்றினை கொள்வனவு செய்திருக்கின்றார்.



| | |
|---|---|
| **4 வருட** கட்டுப்பணச் செலுத்தல் காலம் | ஆயுள் அனுகூலம் **ரூபா. 2 மில்லியன்** |
| **10 வருட** காப்புறுதிக் காலத்துடன் | விபத்து அனுகூலம் **ரூபா. 2 மில்லியன்** |
| வருடாந்தக் கட்டுப்பணம் **ரூபா. 400,000** | கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் - **ஆம்** |

# AIA ஸ்மார்ட் வெல்த் திட்டமானது கயான் தனது சொத்தை சேர்த்தல், நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு எவ்வாறு உதவியுள்ளது

### முதலீட்டு அனுகூலங்கள்

முதிர்வில் கயானிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி கீழுள்ளவாறு

| | உத்தேசிக்கப்பட்டுள்ள பங்குலாப வீதங்கள் | | |
|---|---|---|---|
| | வருடமொன்றுக்கு 4% | வருடமொன்றுக்கு 8% | வருடமொன்றுக்கு 10% |
| முதிர்வில் உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி (ரூபா) | 1,903,502 | 2,409,706 | 2,721,034 |

15 வருட காலத்திற்கு மாதாந்த வருமானமாக அவரது முதிர்வு அனுகூலத்தைப் பெறுவதற்கு கயான் தெரிவு செய்தால் ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் உத்தேசிக்கப்பட்டுள்ள மாதாந்த வருமானமானது கீழுள்ளவாறு இருக்கும் (ரூபா)

| உத்தேசிக்கப்பட்டுள்ள பங்குலாப வீதங்கள் | வருடமொன்றுக்கு 4% | வருடமொன்றுக்கு 8% | வருடமொன்றுக்கு 10% |
|---|---|---|---|
| பங்குலாப அதிகரிப்பானுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள வருடாந்தப் பங்குலாபங்கள் | வருடமொன்றுக்கு 5.2% | வருடமொன்றுக்கு 10.4% | வருடமொன்றுக்கு 13% |
| 51 வயதில் | 10,575 | 13,387 | 15,117 |
| 56 வயதில் | 13,147 | 21,219 | 26,940 |
| 66 வயதில் | 16,344 | 33,634 | 48,009 |
| வருமானம் பெறும் காலத்தின் போது மொத்த வருமானப் பெறுமதி | 2,627,658 | 4,964,675 | 6,900,282 |

**பாதுகாப்பு அனுகூலங்கள்**

விபத்தொன்றின் காரணமாக 2வது வருடத்தின் போது கயான் முழுமையான நிரந்தரமான இயலாமைக்குட்பட்டால் அவருடைய அன்பிற்குரியவர்கள் கீழுள்ளவாறு பாதுகாப்பு அனுகூலங்களைப் பெறுவார்கள்.



ஆயுள் அனுகூலத்திற்கு மேலதிகமாக கயானினுடைய அன்பிற்குரியவர்களுக்கு ரூபா. 2,000,000 செலுத்தப்படும்.




கயான் சார்பாக AIA கட்டுப்பணங்களைச் செலுத்தி காப்புறுதியைத் தொடரும்.




ஆகவே கயானினுடைய அன்பிற்குரியவர்களுக்காக அவர் கட்டியெழுப்ப நினைத்த நிதியிலிருந்தான அனுகூலங்களை அவர்கள் பெறுவார்கள். மேலும் மொத்தத் தொகை ஒன்றாக அல்லது மாதாந்த வருமானமாக இழப்பீட்டுக் கோரிக்கைக்கான நிதியினைத் தெரிவு செய்வதில் அவர்கள் நெகிழ்வுத் தன்மையினைக் கொண்டிருப்பார்கள்.



## முக்கியமான காப்புறுதித் திட்ட தகவல்கள்

| | |
|---|---|
| வயது வரையறை | 19-61 வருடங்கள் (அடுத்த பிறந்த தினத்தில்) |
| அதிகபட்சமான முதிர்வு வயது | 76 வருடங்கள் (அடுத்த பிறந்த தினத்தில்) |
| கட்டுப்பணச் செலுத்தல் காலம் | 4 வருடங்கள் அல்லது 6 வருடங்கள் அல்லது ஒரு ஒற்றைக் கொடுப்பனவாக |
| காப்புறுதிக் காலம் | தெரிவு 1 : 20 வருடங்கள் (6 வருட அல்லது 4 வருடக் கொடுப்பனவுகள்) |
| | தெரிவு 2 : 15 வருடங்கள் (6 வருடக் கொடுப்பனவுகள் மட்டும்) |
| | தெரிவு 3 : 10 வருடங்கள் (4 வருட கொடுப்பனவுகள் மற்றும் ஒற்றைக்கட்டுப்பண முறை) |
| | தெரிவு 4 : 5 வருடங்கள் (ஒற்றைக் கட்டுப்பண முறை மாத்திரம்) |
| மதாந்த வருமானமாக திருப்பிப் பெறுதல் தெரிவு (காலம்) | 5 - 30 வருடங்கள் வரை |
| குறைந்தபட்ச மொத்த வருடாந்தக் கொடுப்பனவாக 4 அல்லது 6 வருடங்களுக்கு | கட்டுப்பணம் செலுத்தும் காலம் 4 வருடங்களாயின் ரூபா 100,000 |
| | கட்டுப்பணம் செலுத்தும் காலம் 6 வருடங்களாயின் ரூபா 75,000 |
| ஒற்றைக் கொடுப்பனவு முறை தெரிவுக்கான குறைந்தபட்ச கட்டுப்பணம் | 5 வருட ஒற்றைக் கொடுப்பனவு கொள்கைக் காலம் ரூபா 5,000,000 |
| | 10 வருட ஒற்றைக் கொடுப்பனவு கொள்கைக் காலம் ரூபா 1,000,000 |
| கட்டுப்பணச் செலுத்தல் முறை | வருடாந்தம், அரையாண்டுக்கு ஒரு முறை, காலாண்டு, மாதாந்தம் மற்றும் ஒற்றைக் கொடுப்பனவு முறை |

# ஏற்புடைய (செல்லுபடியாகும்) கட்டணங்கள்

| காப்புறுதி வருடம் | | 1வது காப்புறுதி வருடம் | 2வது காப்புறுதி வருடம் | 3வது காப்புறுதி வருடம் | 4வது காப்புறுதி வருடம் | 5வது காப்புறுதி வருடம் | 6வது காப்புறுதி வருடம் |
|---|---|---|---|---|---|---|---|
| வருடாந்த மாக்கப்பட்ட அடிப்படைக் கட்டுப்பணத்தின் மீதான ஒதுக்கீட்டுக் கட்டணங்கள் | 6 வருடச் செலுத்தல் முறை | 60% | 25% | 15% | 10% | 5% | 5% |
| | 4 வருடச் செலுத்தல் முறை | 60% | 25% | 15% | 10% | - | - |
| அடிப்படை ஒற்றைக் கட்டுப்பணத்தின் மீதான ஒதுக்கீட்டுக் கட்டணம் | 5 வருட காப்புறுதிக் காலம் | 8% | - | - | - | - | - |
| | 6 வருட காப்புறுதிக் காலம் | 10% | - | - | - | - | - |

| காப்புறுதி வருடம் | 1வது காப்புறுதி வருடம் | 2வது காப்புறுதி வருடம் | 3வது காப்புறுதி வருடம் | 4 இலிருந்து 10வது காப்புறுதி வருடம் | 11வது காப்புறுதி வருடத்திலிருந்து |
|---|---|---|---|---|---|
| கையளிப்பு அபராதம் (6 செலுத்தல் மற்றும் 4 செலுத்தல்) | 100% | | | 100% to 0%* | 0% |
| கையளிப்பு அபராதம் (ஒற்றைக் கட்டுப்பணம்) | 2% | | | 1% | |

*காப்புறுதி ஆண்டுகளின் போது நேர்கோட்டில் குறைவடைகின்றது

### நிர்வாகக் கட்டணம்

4 செலுத்தல் மற்றும் 6 செலுத்தல் திட்டங்களுக்கு மட்டும் ஒவ்வொரு ஜனவரி 1ம் திகதியும் வருடமொன்றுக்கு 15% இனால் அதிகரிக்கப்படுவதனால் 2021 இற்காக வருடமொன்றுக்கு ஷரூபா. 1,224

### மாதிரிக் கட்டணம்

மாதாந்த முறைக்கான கட்டுப்பணத்தில் 4%

### நிதி மேலாண்மைக் கட்டணம்

காப்புறுதிக் காலம் முழுவதும் மற்றும் மாதாந்த வருமானம் பெறும் காலத்தின் போதும் முதலீட்டுக் கணக்கு மீதியில் வருடமொன்றுக்கு 0.75% அறவிடப்படும்.

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## 1. AIA ஸ்மார்ட் வெல்த் என்றால் என்ன?

AIA ஸ்மாட் வெல்த் என்பது உங்கள் சொத்தை சேர்த்து, நிர்வகித்து மற்றும் பாதுகாக்கும் அதேவேளை, நீண்ட காலப் பாதுகாப்பை வழங்குகின்ற வரையறுக்கப்பட்ட கட்டுப்பணச் செலுத்தல் காலத்தைக் கொண்ட ஆயுள் காப்புறுதித் திட்டமாகும்.

## 2. AIA ஸ்மார்ட் வெல்த் திட்டத்தினை நான் கொள்வனவு செய்யும் போது கட்டுப்பணங்களை நான் எவ்வளவு காலத்திற்குச் செலுத்த வேண்டும்?

நீங்கள் கட்டுப்பணங்களை 4 அல்லது 6 வருடங்களுக்கு மட்டுமே செலுத்த வேண்டும். எனினும் இதன்போது நீங்கள் 20 வருடங்கள் வரையில் பாதுகாக்கப்படுவீர்கள்.

உங்கள் கட்டுப்பணங்களை ஒற்றைக் கட்டுப்பணமாகச் செலுத்தல் மற்றும் 10 வருடங்கள் வரை உங்கள் நிதியை கட்டியெழுப்புவதற்கான விருப்பத் தெரிவினை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள்.

## 3. ஏற்கனவே நான் சேமிப்புகளை வைத்திருக்கிறேன் எனினும் இது ஏன் எனக்குத் தேவைப்படும்?

நீங்கள் முதலிடுவதற்கும் மற்றும் சேமிப்பதற்கும் பல தெரிவுகள் உள்ளன. எனினும் உங்கள் சேமிப்புகளை அதிகரிக்கும் போதே 'பாதுகாப்பை' வழங்குகின்ற ஒரே தெரிவாக ஆயுள் காப்புறுதியே காணப்படுகின்றது. உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் சேமிப்பு அனுகூலங்களுடனான மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதித் திட்டமே AIA ஸ்மார்ட் வெல்த் ஆகும்.

## 4. எனக்கு காணப்படும் கட்டுப்பணச் செலுத்தல் காலம் மற்றும் காப்புறுதிக் காலத் தெரிவுகள் என்ன?

4 செலுத்தல் 10 (கட்டுப்பணச் செலுத்தல் காலம் 4 வருடங்கள் மற்றும் காப்புறுதிக் காலம் 10 வருடங்கள்)

4 செலுத்தல் 20 (கட்டுப்பணச் செலுத்தல் காலம் 4 வருடங்கள் மற்றும் காப்புறுதிக் காலம் 20 வருடங்கள்)

6 செலுத்தல் 15 (கட்டுப்பணச் செலுத்தல் காலம் 6 வருடங்கள் மற்றும் காப்புறுதிக் காலம் 15 வருடங்கள்)

6 செலுத்தல் 20 (கட்டுப்பணச் செலுத்தல் காலம் 6 வருடங்கள் மற்றும் காப்புறுதிக் காலம் 20 வருடங்கள்)

ஒற்றைக் கட்டுப்பணம் (காப்புறுதிக் காலம் 5 அல்லது 10 வருடங்கள்)

## 5. நான் மரணித்தால் யாது நிகழும்?

4 செலுத்தல் மற்றும் 6 செலுத்தல் விருப்பத் தெரிவுகளுக்காக - நீங்கள் துரதிஷ்டவசமாக மரணித்தால் உங்கள் அன்பிற்குரியவர்கள் ஆயுள் அனுகூலத் தொகையினை உடனடியாகப் பெறுவார்கள். மரணம் விபத்து காரணமாக நிகழுமாயின் ஆயுள் அனுகூலத் தொகைக்கு மேலதிகமாக விபத்து அனுகூலத் தொகையும் செலுத்தப்படும். கட்டுப்பணச் செலுத்தல் காலத்தின் போது மரணம் சம்பவித்தால், AIA உங்கள் சார்பாக கட்டுப்பணங்களைச் செலுத்தி உங்கள் காப்புறுதியினைத் தொடரும். ஆகவே உங்கள் அன்பிற்குரியவர்களுக்காக நீங்கள் கட்டியெழுப்ப நினைத்திருந்த தொகையினை அவர்கள் பெறுவார்கள். முதிர்வின் போது மொத்தத் தொகை ஒன்றாக அல்லது மாதாந்த வருமானமாக இழப்பீட்டுக் கோரிக்கைத் தொகையினைத் தெரிவு செய்வதற்கான நெகிழ்தன்மையினையும் அவர்கள் கொண்டிருப்பார்கள்.

ஒற்றைக் கட்டுப்பண விருப்பத் தெரிவி ற்காக - நீங்கள் துரதிஷ்டவசமாக மரணித்தால் உங்கள் அன்பிற்குரியவர்கள் ஆயுள் அனுகூலத் தொகையினை உடனடியாகப் பெறுவார்கள். உங்கள் அன்பிற்குரியவர்களுக்காக நீங்கள் கட்டியெழுப்ப நினைத்திருந்த தொகையினை அவர்கள் பெறுவார்கள். முதிர்வின் போது மொத்தத் தொகை ஒன்றாக அல்லது மாதாந்த வருமானமாக இழப்பீட்டுக் கோரிக்கைத் தொகையினைத் தெரிவு செய்வதற்கான நெகிழ்தன்மையினையும் அவர்கள் கொண்டிருப்பார்கள்.

## 6. எவ்வாறு AIA ஸ்மார்ட் வெல்த் எனது நிதியினை வளர்ச்சியடையச் செய்கின்றது?

நீங்கள் செலுத்துகின்ற அடிப்படைக் கட்டுப்பணம் முதலாவது நாளில் இருந்து (ஒதுக்கீட்டுக் கட்டணங்களைக் கழித்ததன் பின்னர்) உங்கள் முதலீட்டுக் கணக்கில் முதலிடப்படும். ஆகவே உங்கள் முதலாவது கட்டுப்பணக் கொடுப்பணவிலிருந்தே உங்கள் நிதி வளர்ச்சி ஆரம்பிக்கின்றது. மேலதிகமாக கூட்டு அடிப்படையில் வருடாந்தப் பங்குலாபங்கள் உங்கள் நிதிக்கு சேர்க்கப்படும். ஆகவே காப்புறுதிக் காலத்தின் நிறைவில் மிகவும் உயர் நிதி ஒன்றினை நீங்கள் பெறுவீர்கள்.

## 7. AIA ஸ்மார்ட் வெல்த் எனது நிதிக்கு உத்தரவாதப்படுத்தப்பட்ட பங்குலாபத்தைச் செலுத்துமா?

ஒவ்வொரு வருடமும் வருடாந்தப் பங்குலாபத்தினால் உங்கள் நிதி அதிகரிக்கப்படும். உத்தரவாதப்படுத்தப்பட்ட பங்குலாபமானது உங்கள் நிதி பெறக்கூடிய குறைந்தபட்சமான பங்குலாபமாகும். எவ்வாறாயினும் உண்மையான பிரகடனப்படுத்தப்பட்ட பங்குலாப வீதமானது வருடாந்த உத்தரவாதப்படுத்தப்பட்ட பங்குலாப வீதத்தை விட உயர்வாக இருந்தால் நீங்கள் பெறுவது உயர்வான பங்குலாப வீதமாகவே இருக்கும். முதிர்வின் போது நீங்கள் பெரியதொரு தொகையினைப் பெறுவீர்கள் என்பதை இது உறுதிப்படுத்தும்.

## 8. மிகவும் சமீப காலங்களில் AIA செலுத்தியுள்ள பங்குலாப வீதங்கள் என்ன?

மிகவும் சமீப காலங்களில் இதையொத்த காப்புறுதித் திட்டங்களுக்கான குறைந்தபட்ச உத்தரவாதப்படுத்தப்பட்ட பங்குலாப வீதம் எதிர் பிரகடனப்படுத்தப்பட்ட பங்குலாப வீதம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது:

| வருடம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறைந்தபட்ச உத்தரவாத படுத்தப்பட்ட பங்குலாப வீதம் | 8% | 8% | 8% | 8% | 8% | 8% | 8% | 8% | 8% |
| உண்மையான பிரகடன படுத்தப்பட்ட பங்குலாப வீதம். | 9.62% | 9.88% | 9.55% | 9.46% | 9.63% | 9.37% | 9.99% | 9.18% | |

வருடாந்தம் பிரகடனப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச உத்தரவாதப்படுத்தப்பட்ட பங்குலாப வீதம் மற்றும் உண்மையான பிரகடனப்படுத்தப்பட்ட பங்குலாப வீதம் ஆயுள் நிதியின் எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தின் அடிப்படையில் வேறுபடலாம். மேலும் இது கடந்த வருடங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட பங்குலாப வீதங்களுக்கு குறைவானதாகவோ, அதிகமானதாகவோ அல்லது அதையொத்ததாகவோ இருக்கலாம்.

## 9. AIA ஸ்மார்ட் வெல்த் உடன் கிடைக்கப்பெறும் பாதுகாப்பு அனுகூலங்கள் என்ன?

- ஆயுள் அனுகூலம்.
- விபத்து காரணமான மரண அனுகூலம் விபத்து காரணமான மரணம், முழுமையான நிரந்தரமான இயலாமை மற்றும் நிரந்தரமான பகுதியளவான இயலாமை ஆகியவற்றைக் காப்பிடுகின்றது.
- கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம்.

ஒற்றைக் கட்டுப்பணத் தெரிவிற்கு கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் மற்றும் விபத்து அனுகூலம் ஏற்புடையதாகாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள்.

## 10. இக்காப்புறுதித் திட்டத்திலிருந்து நான் பணத்தை மீளப்பெற முடியுமா?

காப்புறுதிக் காலத்தின் போது கட்டுப்பணச் செலுத்தல் கால நிறைவின் பின்னர் உங்கள் நிதிப் பெறுமதியின் 15% இனை நீங்கள் ஒரு தடவை மீளப்பெற முடியும்.

ஒற்றைக் கட்டுப்பணத் தெரிவிற்கு இந்த சிறப்பம்சம் ஏற்புடையதாகாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள்.

## 11. வருடாந்தமாக்கப்பட்ட அடிப்படைக் கட்டுப்பணம் மற்றும் வருடாந்தமாக்கப்பட்ட கட்டுப்பணம் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடு என்ன?

வருடாந்தமாக்கப்பட்ட அடிப்படைக் கட்டுப்பணம் ஆயுள் அனுகூலம், விபத்து மூலமான மரண அனுகூலம் மற்றும் கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் ஆகியவற்றிற்கான அபாயக் கட்டணங்களற்ற கட்டுப்பணமாகும். இக்கட்டுப்பணமானது உங்கள் நிதியினை வளர்ச்சியடையச் செய்வதற்காக உங்களின் முதலீட்டுக் கணக்கிற்கு ஒதுக்கப்படும். மொத்த வருடாந்தமாக்கப்பட்ட கட்டுப்பணமானது உங்கள் அனைத்து சேமிப்பு மற்றும் பாதுகாப்பு அனுகூலங்களுக்கான கட்டுப்பணமாகும். இது ஆயுள் அனுகூலம், விபத்து மூலமான மரண அனுகூலம் மற்றும் கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் ஆகியவற்றிற்கான கட்டுப்பணம் மற்றும் உங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு ஒதுக்கப்பட்ட கட்டுப்பணம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

ஒற்றைக் கட்டுப்பணத் தெரிவில் ஒரு தடவையில் அனைத்துக் கட்டுப்பணமும் செலுத்தப்படுவதனால் 4 மற்றும் 6 வருட கட்டுப்பணச் செலுத்தல் காலத் தெரிவுகளுக்கு மட்டுமே இக் காப்புறுதிக் காலங்கள் ஏற்புடையதாக இருக்கும்.

## 12. AIA ஸ்மார்ட் வெல்த் காப்புறுதியை எவ்வாறு நான் கொள்வனவு செய்ய முடியும்?

நீங்கள் உங்களுடைய AIA வெல்த் பிளேனர், நிதியியல் திட்டமிடல் அதிகாரி, அதிகாரமளிக்கப்பட்ட தரகர் ஒருவரினைத் தொடர்பு கொள்ள முடியும் அல்லது 0112 310 310 இனூடாக எங்களை அழையுங்கள்.

## நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

இக்காப்புறுதித் திட்டத்தினை நீங்கள் உரிமம் பெற்ற AIA வெல்த் பிளேனர், AIA நிதியியல் திட்டமிடல் அதிகாரி அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட தரகர் ஒருவரிடமிருந்து மட்டுமே பெற முடியும்.

உங்களுடைய விருப்பத் தெரிவிற்கு ஏற்றவாறு காப்புறுதித் திட்டம் ஒன்றை மற்றும்/அல்லது காப்புறுதி வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான உரிமையையும் மற்றும்/அல்லது வங்கி ஒன்றினால் அல்லது வேறு எந்தவொரு நிதியியல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற எந்வொரு நிதியியல் திட்டங்கள் அல்லது சேவைகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்டு அல்லது தொகுக்கப்பட்டு வழங்கப்படுகின்ற எந்தவொரு காப்புறுதித் திட்டத்தினையும் மறுப்பதற்கான உரிமையையும் நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள்.

இது காப்புறுதித் திட்டக் கண்ணோட்டம் மட்டுமே ஆகும். மேலும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் பிரயோகிக்கப்படும். முழுமையான காப்புறுதித் திட்ட விபரங்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவுசெய்து காப்புறுதி ஆவணத்தைப் பார்வையிடுங்கள். உங்களுடைய முன்மொழிவுப் படிவத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உங்களுக்கு விற்பனை விளக்கம் மற்றும் விலைமனு ஒன்று வழங்கப்படும். இது காப்புறுதித் திட்டச் சிறப்பியல்புகளையும் மற்றும் தகவல்களையும் விரிவாகவே விபரிக்கின்றது.

ஆயுள் காப்புறுதிதார் காப்புறுதி உரிமையாளராக இல்லாத பட்சத்தில், ஆயுள் காப்புறுதிதாரருக்கு ஏற்புடையதாக காப்பீடுகள் இருக்கும் போது, மேலே வழங்கப்பட்டுள்ள அனுகூலங்கள் காப்புறுதி உரிமையாளருக்குப் பிரயோகிக்கக்கூடியதாக (ஏற்புடையதாக) இருக்கும்.

SW - 300000380
V3 - 10/11

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) இனால் வெளியிடப்பட்டது. 10/11/2021

HEALTHIER, LONGER,
BETTER LIVES

**AIA** நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு காப்புறுதிக்காகவும் ரூ. 100 இனை இலங்கை புற்று நோயாளர்கள் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க வாக்குறுதியளிக்கின்றோம்.